அ.வ.எண்: 31/2016 நாள்: 29.04.2026

பி.வா.சா.1 – பாலுக்கரசு

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனக்கு தற்போது 62 வயதாகிறது. நான் தற்போது என்ன படித்துள்ளேன் என்றால் M.sc, M.phil. Ph.D. படித்துள்ளேன் நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். எனது தந்தை பெயர் அழகையா என்றால் சரிதான். அவர் தாவா வழக்கில் 1ம் பிரதிவாதியாக உள்ளார் என்றால் சரிதான், 2ம் பிரதிவாதி காளியம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். தாவா வழக்கின் வாதிகள் அனைவரும் சிறுவாளூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதிகளை எனக்கு தெரியுமா என்றால் காசிலிங்கம் ஐயாவை தெரியும், மற்றவர்களை எனக்கு தெரியாது. நான் ஊரில் இல்லாததால் எனக்கு அவர்களை தெரியாது என்றால் சரிதான்.

2. எனக்கு வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் அரசாங்கம் வழங்கிய இதர அடையாள அட்டைகள் திருச்சி முகவரியில் உள்ளது என்றால் சரியல்ல, நாமக்கல் முகவரியில் உள்ளது. தாவா சொத்து அமைந்துள்ள விரிசூர் கிராமத்து முகவரியில் இல்லை என்றால் சரிதான்.

வாதிகள் என்ன நோக்கத்திற்காக என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து உள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தாவா வழக்கில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும், என் தந்தை தாக்கல் செய்த எதிர்வழக்குரையை அடாப்ட் செய்துள்ளேன் என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் தாவா வழக்கிற்கு தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடைய தந்தையுடையது தான் என்றால் சரிதான், அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும்.

3. வாதிகள் தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் ஓ.எஸ். 160/2014 என்ற எண்ணில் வழக்கை தாவா வழக்கின் 4ம் பிரதிவாதிக்கு எதிராக இதே சொத்திற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு இதே நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்து 08.09.2015 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் விசாரணைக்கு நானும் எனது அம்மாவும் ஆஜர் ஆகாததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுப்பதற்கு எந்த விதமான நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனுவை எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. மேற்படி

வழக்கை திரும்ப நடத்துவதற்காக நான் சட்ட நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் அவர் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முயற்சிகள் எடுத்து வருகிறேன், அது சம்பந்தமான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்தின் சர்வே எண். 5/2 என்றால் சரிதான் அதன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 75 சென்ட் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் ராக்கப்ப ஆசாரிக்கு பூர்வீக பாதிக்கப்பட்ட சொத்து ஆகும். தாவா சொத்தை எனது தாயார் மேற்படி ராக்கப் ஆசாரியிடம் இருந்து 04.10.1967 அன்று ஆவண எண். 3773 மூலம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். மேற்படி சொத்திற்கு எனது தாயார் பெயரில் பட்டா வந்துள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் கிராம உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். அவர் தாவா சொத்து உள்ள குரூப்பில் கிராம உதவியாளராக வேலை பார்த்தார் என்றால் சரியல்ல, விரிசூர் குரூப்பில் தான் வேலை பார்த்தார்.

5. மேற்படி விரிசூர் குரூப்பில் எனது தந்தை எத்தனை ஆண்டுகளாக கிராம உதவியாளராக பணிபுரிந்தார் என்றால் சுமார் 15 ஆண்டுகளாக பணிபுரிந்தார். எனது தகப்பனார் எப்பொழுது இறந்தார் என்றால் 08.01.2018 அன்று இறந்தார். வாதி தரப்பில் யாரை சாட்சியாக விசாரித்தார்கள்

என்றும் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரமும், எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் என்னென்ன பரிகாரங்கள் கேட்டுள்ளார்கள் என்றால், இடத்திற்கு தான் பரிகாரம் கேட்டுள்ளார்கள், மற்ற பரிகாரங்கள் எனக்கு தெரியவில்லை. என் தகப்பனார் எனக்கு 01.11.2010 தேதியில் எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தான் தாவாசொத்திற்கு உரிமை கொண்டாடி எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாயாருக்கு 1967 ம் ஆண்டு கிரைய பாத்தியம் என்றால் சரிதான். தாவா சொத்தைப் பொறுத்து எனது தாயார் எனது தந்தைக்கு எந்தவித பதிவு ஆவணமும் ஏற்படுத்தி தரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. எனது தாயார் பெயரில் இருந்த பட்டா எனது தந்தை பெயருக்கு எப்படி மாறியது என்றால் குடும்ப தலைவர் என்ற அடிப்படையில் அவர் பெயரில் மாற்றம் செய்து கொண்டார்கள். எனது தந்தை விரிசூர் குரூப்பில் தலையாறியாக வேலை பார்த்ததால் சட்டத்திற்கு புறம்பாக தாவாசொத்திற்கு பட்டா மாற்றம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பட்டா மாற்றம் செய்வதாக இருந்தால் வருவாய் நிலை ஆணை 31 (2) – ல் உள்ள நிபந்தனைகளின் படி தான் பட்டா மாற்றம் செய்ய முடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகளின் பரிகாரத்தை மறுத்து நான் எதிர் கோரிக்கை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல, கேட்டுள்ளேன். நான் சொல்வது போல் எதிர் கோரிக்கை பரிகாரம் கேட்கவில்லை என்றால்

சரியல்ல. எனது பெற்றோர் யாருக்கும் எவ்வித மோசடி கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்க மாட்டார்கள் என்றால் சரிதான்.

7. தாவா சொத்தை பொருத்து 2ம் பிரதிவாதியாகிய எனது தாயார் 02.02.1971 அன்று திருவாடானை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 67/1971 மூலம் கிராம மக்களின் நலனுக்காகவும் சிறுவத்தூர் கண்மாய் நீர் தேக்கத்திற்காகவும் பொதுவாக தாவாசொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் எனது தகப்பனார் அழகையா அடையாளம் காட்டிய நபராகவும், சாட்சியாகவும் கையெழுத்து செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கிற்கு பின்பும் நான் மேற்படி ஆவணத்தில் சான்றிட்ட நகலை எடுத்து பார்க்கவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கிற்கு பிறகும் மேற்படி ஆவணம் மோசடியானது என்றும், சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது அதனால் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

8. தாவா சொத்தை கிராமத்தார்களுக்கு கிரையம் செய்து கொடுத்த பின்பு அது சம்பந்தமாக எனக்கு மோசடி ஆவணம் எழுதிக் கொடுத்தது தொடர்பாக கிராமத்தார்கள் எனது பெற்றோரின் மீது புகார் கொடுத்து தேவகோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CRMP.1703/2016 என்ற எண்ணில் 24.09.2016-ம் தேதியிட்ட நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் எனது பெற்றோரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த ஓ.எஸ். 160/2014 என்ற வழக்கை யார் மீது தாக்கல் செய்தேன் என்றால், தாவா வழக்கின் வாதிகள் மீது தாக்கல் செய்தேன். நான் மேற்படி வழக்கை ராமநாதன் என்பவர் மீது தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் தாவா வழக்கின் வாதிகள் மீது தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

9. மேற்படி வழக்கில் ராமநாதன் என்பவர் வழக்கறிஞர் மூலம் எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் அது பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. மேற்படி ராமநாதன் அந்த வழக்கில் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் என்றும், என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்தார் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ராமநாதன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் பக்கம் 3 பத்தி 9 இல் இந்த ஆவணத்தை குறித்து குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.04.29 12:20:54 +0530